
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 6 | ஜூலை 1993 | இதழ் 7


வெளியிடுவோர் :

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002 (ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை
,, : பகல் 11-00—12-00...ஞாயிறு பள்ளி
,, : மாலை 5-30—6-30...திருமறை ஆய்வு & கலந்துரையாடல்

வியாழன் : மாலை 7-15—8-30...வேத ஆய்வுவகுப்புகள்

வெள்ளி : மாலை 7-00—9-00...ஜெப ஆராதனை

## இதழின் உள்ளே


1. பெந்தெகோஸ்தே நாளின் சிறப்புகள் 1
2. எதிர்மறை எண்ணங்களைத் தவிர்ப்போம் 7
3. தன் கணவனை ஆண்டவனே என அழைத்தாள் 10
4. பரலோகத்திற்கு பலவழிகள் உண்டா? 14
5. மனிதன் எப்படிப்பட்டவன்? 18
6. திரும்பிச் செல்ல ஒரு வேண்டுகோள் 23
7. சத்திய வழியிலே நடப்போம்! 25
8. அந்த நாள் 26

# THIRUMARAI AASAAN

Editor.
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701, Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 6 JULY—1993 Issue 7


**ஆசிரியவுரை**

# பெந்தெகொஸ்தே நாளின் சிறப்புகள்

கீழ்ப்படியாமை என்பது, மிக வேகமாக வளர்ந்து வரும் ஒரு சமூகத் தீமை. இத்தீமை குடும்பங்கள், கல்வி நிலையங்கள், தொழிற்கூடங்கள் இப்படி இன்னும் பல அமைப்புகளின் சமாதானத்தை அழித்து, தரத்தைக் குறைத்து, செயல்திறனைப் பாதித்து ஒரு மோசமான நிலைக்கு இழுத்துச் செல்கிறது. இதன் கோரப்பிடியில் சிக்காமல் இருக்கின்ற ஒரு அமைப்பைக் காண்பது மிகவும் கடினம். இப் பெருந்தீமை, எப்படி ஜென்மீக வாழ்க்கையைப் பாதித்துப் பிரச்னைகளை உண்டாக்குகிறதோ, அதைப் போலவே ஆன்மீக வாழ்க்கையையும் விட்டு வைப்பதில்லை. சொல்லப் போனால், கீழ்ப்படியாமையின் மூலம் ஏற்படும் நஷ்டம் ஆன்மீக காரியங்களில் தான் அதிகம். ஆம், செப்பனிட முடியாத விளைவுகளை ஏற்படுத்துகிறது.

இப்பூவுலகில், தான் வாழ்ந்த நாட்களில் மட்டுமல்ல, கொடூரமான சிலுவை மரணம் தன்னை எதிர்நோக்கியிருந்த வேளையிலும், தன்னை பிதாவின் சித்தத்திற்கு முற்றிலும் கீழ்ப்படுத்திய, தேவ மைந்தனின் சீடர்கள் என்று தங்களைப் பெருமையோடும், உரிமையோடும் அழைத்துக் கொள்ளும் கிறிஸ்தவர்களும் இத்தீமைக்கு விதிவிலக்கானவர்களல்ல. கீழ்ப்படியாமை என்பது, கட்டளைகளை ஏற்றுக்கொள்ளாமல், பின்பற்றாமல் இருப்பதாகும் செய்ய வேண்டியவைகளைச் செய்யாமல் இருப்பதும், செய்யக் கூடாதவைகளைச் செய்வதும் கீழ்ப்படியாமையே.

இன்றைக்குக் கிறிஸ்தவச் சமுதாயம் பண்டிகைகள் என்ற பெயரில் சில நாட்களைத் தெரிந்து கொண்டு, அந்த நாட்களுக்குப் பல சிறப்புகளை தாரளமாக அள்ளிக் கொடுக்கின்றனர். கிறிஸ்து பிறந்த நாள், சாம்பல் புதன், பெரிய வெள்ளி, ஈஸ்டர் திருநாள், தேவமாதா பிறந்த நாள், கர்த்தர் ரூப மாறிய நாள் என்று, இப்படி அநேக காட்சிகளைக் குறித்து வேதாகமம் எங்கே போதிக்கிறது? ஆர்வ மிகுதியினால் ஏற்படும் தீமைகள் இவை. சொல்லப்படாத காட்சிகளைத் தெரிந்து கொண்டு, அவைகளுக்கு அவசியமே இல்லாத சிறப்புக்களைக் கொடுத்து, தாங்கள் செய்வதோடு மட்டுமல்லாமல் தங்கள் பிள்ளைகளுக்கும் அவைகளைப் போதித்து, வளருகின்ற அந்தப் பிஞ்சு உள்ளங்களில் தேவனுடைய வார்த்தையிலிருந்து விலகிச் செல்லுதல் என்ற நஞ்சை ஊட்டி விடுகின்றோம். வேதாகமம், குறிப்பாகப் புதிய பிரமாணம் இந் நாட்களைக் குறித்தெல்லாம் மௌனம் சாதிக்கிறதே ஏன் என்று நாம் சிந்திப்பதேயில்லை. ஆதி 8:4-ல் ''ஏழாம் மாதம் பதினேழாம் தேதியிலே, பேழை அரராத் என்னும் மலைகளின் மேல் தங்கிற்று'' என்று வாசிக்கிறோம். கிறிஸ்துவின் பிறப்புக்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாக நடந்த ஒரு சம்பவத்தையே மாதத்தோடும், நாளோடும் துல்லியமாகச் சொல்லும் வேதாகமம், கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றியும், நாம் கொண்டாடுகின்ற ஏனைய நாட்களைக் குறித்தும் ஒன்றும் சொல்லுவதிலேயே ஏன் என்று சிந்தித்ததுண்டா? நாம் ஏன் சிந்தனைக்குத் தீனி போட மறுக்கிறோம்?

சரி, கட்டளையிடப்படாத நாட்களைத் தெரிந்துகொண்டு அவைகளுக்குள்ள சிறப்புக்களையும் துல்லியமாக அறிந்து வைத்திருக்கிற கிறிஸ்தவச் சமுதாயம் கிறிஸ்தவம் என்கின்ற அந்த அழகிய மாளிகைக்கு அஸ்திவாரமாகத் திகழும் பெந்தேகொஸ்தே நாளைக் குறித்து எந்த அளவுக்கு அறிந்திருக்கிறது? இந்த நாள் ஒரு முக்கியமான நாள் என்று எத்தனை கிறிஸ்தவர்களுக்குத் தெரியும்? இந்த நாளில் நடந்தவற்றைக் குறித்து, தங்கள் பிள்ளைகளுக்குப் போதிக்கின்ற பெற்றோர்கள் எவ்வளவு பேர் இருப்போம்? இந்த நாளைக் குறித்தும், அதன் சிறப்புக்களைக் குறித்தும் வேதாகமம் என்ன போதிக்கிறது என்று ஆராய்வோமா?

இந்த நாளின் சிறப்புக்களைப் பார்க்குமுன், இந்த நாளின் பின்னணியைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

பெந்தெகோஸ்தே நாள் என்பது இஸ்ரவேலருடைய சரித்திரத்தில் ஒரு முக்கியமான நாள். இஸ்ரவேலரின் பிரதான பண்டி

க்கையாகிய பஸ்கா கொண்டாட்டங்களுக்குப் பின்வரும் ஐம்பதாவது நாள். இதைப் பற்றி லேவி. 23:15-21 வசனங்களில் நாம் காணலாம். அந்த நாளின் காலை 9 மணிக்கு (அவர்களுக்கு மூன்றாம் மணி வேளை) இஸ்ரவேலர் கூட்டமாகக் கூடி, கர்த்தர் தங்களுக்குக் கொடுத்த அறுவடையின் முதற்பலன்களை, கர்த்தருக்குக் காணிக்கையாகச் செலுத்திக் கொண்டாடுவார்கள். அது மாத்திரமல்ல, அந்நாளில் பெருந்திரளான மக்கள் கூடுவார்கள் உலகெங்கிலும் உள்ள ஜனங்கள் எப்படியாவது பஸ்கா பண்டிகைக்கு எருசலேமில் இருக்கவேண்டுமென விரும்பி வந்து, தொடர்ந்து பெந்தெகோஸ்தே நாள் வரையிலும் எருசலேமில் தங்கியிருப்பார்கள். அப். 2:5 வசனத்தில், ''வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவ பக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமில் வாசம் பண்ணினார்கள்'' எனக் காண்கிறோம். கீழ்வரும் வசனங்களில் 17 நாட்டு மக்கள் கூடிவந்தார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது.

இப்பொழுது அந்த நாளின் சிறப்புகளுக்கு வருவோம். இம் மகத்தான நாள் இடம் பெற்றிருக்கும் புத்தகம் புதிய ஏற்பாட்டின் ஐந்தாம் புத்தகமான அப்போஸ்தலருடைய நடபடிகள். சபைச் சரித்திரத்தைப் பற்றி, இப் பூமியில் எழுதப்பட்ட முதல் புத்தகம் இதுதான். ''நான்கு நற்செய்தி நூல்களும் கிறிஸ்துவானவர் இப்பூமியில் இருந்தபொழுது என்னவெல்லாம் செய்தார் என்பதை விளக்கும் பொழுது, அந்தக் கிறிஸ்துவானவர் பரமேறிய பின் என்ன செய்தார் என்பதைப் படம்பிடித்துக் காட்டுகிறது இப் புத்தகம்''.

இந்த அப்போஸ்தலருடைய நடபடிகளில் ''முதன் முதலாக'' நடந்தவைகள் என்று குறைந்தது 13 சம்பவங்கள் உண்டு. இவைகளில், முதல் 5, அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள பெந்தேகொஸ்தே நாளில் நிறைவேறியுள்ளது என்பதை நாம் கவனிப்பது அவசியம்.

1. நமதாண்டவரால் வாக்குத்தத்தமாக அப்போஸ்தலர்களுக்குச் சொல்லப்பட்ட பரிசுத்தஆவியானவரின் வருகை பெந்தெகோஸ்தே நாளில் நடந்துள்ளது. ''ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்'' அப். 2;5). கிறிஸ்துவானவர், யோவான் 16:13-ல் ''சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப்போகிற

காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்'' என்றார். அந்த வாக்கு மாறாதவர் வாக்களித்ததைப் போலவே, பரிசுத்த ஆவியானவர், அப்போஸ்தலர்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் நடத்தும்படியாக, பெந்தெகோஸ்தே நாளில் வந்தார். அப்போஸ்தலர்கள் பிரசங்கிக்கத் தொடங்கினார்கள்.

2. சபை தோற்றுவிக்கப்பட்ட மகிழ்ச்சிக்குரிய சம்பவம் பெந்தெகோஸ்தே நாளில் தான் நடந்தது. பழைய ஏற்பாட்டின் காலங்களில் விதையாக மறைந்திருந்தது, பெரும் விருட்சமாக மாறி அநேகர் காணும்படியாக அந்நாளில் காட்சி தந்தது. பெந்தெகோஸ்தே நாளுக்கு முன்பாக ஆயத்தமாகிக் கொண்டிருந்த சபையானது, அந்த நாளில் முழுமையான ஒன்றாக நின்றது. பழைய ஏற்பாட்டின் காலத்திலும் சபையானது இருந்தது, ஆனால் தேவனுடைய திட்டத்தில், அவருடைய எண்ணத்தில் இருந்தது. அது வாக்குத்தத்தமாக இருந்தது. கிறிஸ்து வருவார், சபையை ஸ்தாபிப்பார் என்று தீர்க்கதரிசிகளாலே முன்னறிவிக்கப்பட்டிருந்தது அவை அனைத்தின் நிறைவேறுதலாக, பெந்தெகோஸ்தே நாளில், சபையானது உருவெடுத்துக் காட்சி தந்து, அநேகரை பிரமிக்கச் செய்தது.

3. உலகச் சரித்திரத்திலேயே, முதன்முதலாகச் சுவிசேஷப் பிரசங்கம் இந்தப் பெந்தெகோஸ்தே நாளில் தான் பிரசங்கிக்கப்பட்டது. சுவிசேஷமாகிய நற்செய்தி என்பது இயேசுகிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் என்பவைகளாகும். நாம் ஒவ்வொருவரும் மெய்க் கிறிஸதவர்களாக மாற இந்த நற்செய்தியைத் தான் விசுவாசிக்க வேண்டும். ''ஒருவன் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டுமென்று, உலக வரலாற்றில், முதன்முதலாகச் சொல்லப்பட்டதும் இந்த பெந்தெகோஸ்தே நாளில் தான் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

4. முதன்முதலாக இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது இந்த பெந்தெகோஸ்தே நாளில் தான் பழைய ஏற்பாட்டின் காலத்தில் ஞானஸ்நானம் இல்லை. ஞானஸ்நானம் என்ற வார்த்தையே பழைய ஏற்பாட்டில் இல்லை. இஸ்ரவேல் எகிப்திலிருந்து வந்தபொழுது, ''எல்லோரும் மோசேக்குள்ளாக, மேகத்தினாலும், சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது (1 கொரி. 10:2). யோவான் ஸ்நானகன் ஊழியம் செய்த நாட்களில்தான் ஞானஸ்நானம் முதலாவதாகப் பிரசங்கிக்கப்பட்டது. யோவான், யாருடைய நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தார் என்பது

நமக்குத் தெரியாது. ஆனால் இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் என்பது பெந்தெகோஸ்தே நாளில் தான் துவங்கிற்று. இந்த ஞானஸ்நானமும் மத் 28:19-ல் சொல்லப்படும் ஞானஸ்நானமும் ஒன்றே.

5 இறுதியாக புதிய ஏற்பாட்டின் முதலாவது ஆராதனை பெந்தெகோஸ்தே நாளில் தான் நடந்தது. இன்று நாமெல்லாரும் தேவனை ஆராதிக்கிறோம். ஆராதிப்பதன் மூலம் நாம் பெற்றுக் கொள்ளும் மனச் சமாதானம் ஏராளம். இச்சிலாக்கியத்தை நமக்கு ஆரம்பித்துக் கொடுத்தது, அந்த பெந்தெகோஸ்தே நாளல்லவா! "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" (அப். 2:42)

சரி, இந்த மகத்தான, ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள வேண்டிய நாளின் சிறப்புக்களைக் கண்ட நாம், அந்நாளின் சிறப்புக்களுக்கு பெருமையைச் சேர்த்த பேதுருவை மறக்கலாமா?

பேதுரு இயேசுக் கிறிஸ்துவின் அப்போஸ்தலன். மீன் பிடிக்கும் தொழில் செய்து வந்தான். அதிகம் கல்லாதவன். வெளிப்படையாக பேசும் இயல்பு இவனுக்குச் சொந்தம். இப்பூமியில் வாழ்ந்து மரித்த மிகச் சிறந்த மனிதர்களில் இவனும் ஒருவன்.

பேதுரு ஒரு தலைசிறந்த பிரசங்கி. அப் 2-ம் அதிகாரத்தில் பெந்தேகோஸ்தே நாளில் இவன் செய்த பிரசங்கத்தைப் போல, கேட்போரின் இருதயத்தைக் கரைத்த ஒரு செய்தியை வேதாகமம் எங்கும் தேடினும் நாம் காண்பது அரிது. அவனுடைய வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகள் சம்மட்டி அடிகளைப் போல இருதயத்தை நொறுக்கிற்று, காரணம் அவன் பிரசங்கம், இன்று அநேகர் செய்வதைப்போல சுயவிளம்பரப் பிரசங்கம் அல்ல. ஜனங்களுடைய பணப்பைகளில் கை வைக்க வேண்டும் என ஆசைப்பட்டு வஞ்சக வார்த்தைகளால் வலை விரிக்கவில்லை அவன். சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவையும், அவருடைய உயிர்த்தெழுதலையும் குறித்தே பேசினான். கூடியிருந்த மக்கள் 50 நாட்களுக்கு முன் செய்த கொடுமையை கொஞ்சமும் தயக்கமின்றி வெளிப்படுத்தினான். ஆனால் "**நீங்கள் சிலுவையிலறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும், கிறிஸ்துமாக்கினார்என்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக் கடவர்கள்**" என்றார் (அப் 2:36) சிலுவை மரணம் நடந்தேறிய அதே எருசலேம் பட்டணம், இயேசுவைக் கொலைக்கு ஒப்

புக் கொடுத்த அதே மக்கள் கூட்டம். கிறிஸ்துவின் உயிர்த்தெழு தலைக் குறித்து நிச்சயமாய் அறிந்திருந்த ஜனங்கள். பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு அவர்களுக்குப் போக்குச் சொல்லவே இடமில்லை. அவர்களின் இருதயம் குத்தப்பட்டது. இந்த இடம்தான் காட்சியின் உச்சக் கட்டம் இந்த உலகத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் கேட்க வேண்டிய ஒரு அர்த்தமுள்ள கேள்வியைக் கேட்டார்கள். **''சகோதரரே! நாங்கள் என்ன செய்ய வேண்டும்?''** என்பதே அந்தக் கேள்வி. பேதுருவின் பதில் என்ன தெரியுமா? **நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'** என்பதே (அப் 2;38).

இதை வாசிக்கும் அருமையான, நண்பரே! பெந்தேகோஸ்தே நாளில் கூடியிருந்த மக்கள் கேட்ட கேள்வியை உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் கேட்டதுண்டா? உங்கள் பதில் ஆம் என்றால் பேதுரு. சொன்னதைப் போல் நீங்கள் உண்மையாகவே செய்துள்ளீர்களா? பேதுரு சொன்னதிற்கு மாறாக, கொஞ்சம் வித்தியாசமாக நீங்கள் செய்திருப்பீர்களானால் கூட அதில் பயன் ஏதுமில்லை நீங்கள் மறுபடியும் அந்தக் கேள்வியைக்கேட்க வேண்டியவர்களாகவே உள்ளீர்கள்!

உங்கள் பதில் இல்லையென்றால், ஏன் தாமதம்? இரட்சிப்பு உங்களுக்கு வேண்டாமா? கிறிஸ்துவின் சிலுவைப் பாடுகள் உங்கள் இருதயத்தைத் தொடவில்லையா? உயிர்த்தெழுதலைக் குறித்து இன்றும் உங்களுக்கு குழப்பம் உள்ளதா? அல்லது உங்களுடைய கேள்வி, சந்தேகம் எதுவாக இருந்தாலும், வேதவாக்கியங்களின் அடிப்படையில் அதில் சிறிதும் நியாயமில்லை. அந்த பெந்தேகோஸ்தே நாளில் கூடியிருந்த மக்கள் கேட்ட அதே கேள்வியை நீங்களும் கேட்க வேண்டுமென உங்களை ஊக்கப்படுத்துகிறோம், கர்த்தர் உங்களோடிருந்து வழிநடத்துவாராக!

**E.Z.S. ராஜநாயகம்**

# எதிர்மறை எண்ணங்களைத் தவிர்ப்போம்

இன்றைய உலகில் சீரான செயல்களும், எதிர் மறையான செயல்களும் காணப்படுகின்றன. பல மக்களின் பேச்சுக்களைக் கவனிக்கும்போது, உறுதியான அல்லது சீரான எண்ணங்களை விட, எதிர்மறையான சிந்தனை ஓட்டமே அவர்கள் மனதை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது என்ற முடிவிற்கு நாம் வருகிறோம். இப்படி எதிர்மறையாக சிந்திக்கும் மக்கள், எல்லாக் காரியங்களிலும் பிரச்சனைகளையே சந்திக்கின்றனர். அரசின் செயல்பாடுகளில் குற்றங் கண்டுபிடித்தல், செய்யும் வேலையில் திருப்தி இல்லை, விலைவாசிகள் ஏற்றம் இப்படி எத்தனையோ பிரட்சனைகள் இவர்களுக்கு. உண்மையில், குறைகள் சில அங்கும் இங்கும் இருப்பதை நாம் ஒப்புக் கொள்ளுகிறோம். என்றாலும், சகல காரியங்களிலும் நமது சிந்தனைகள் சீராக இருப்பின், இத்தகைய எதிர்மறை எண்ணங்களின் வேகம் குறைந்து போவதை நாம் காணமுடியும், எப்படி இருப்பினும், வாழ்வை தீர்மானமான கண்ணோட்டத்தில் நாம் அணுகும் போது, நம்மை எதிர்நோக்கி வரும் எதிர்மறை எண்ணங்களின் வேகம் குறைந்து போகிறது.

கிறிஸ்தவ வாழ்வில் கூட சில எதிர்மறை செயல்கள் காணப்படுவதை நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும். உலகில், நிச்சயமாக பல கெட்ட செயல்களை நாம் காணமுடிகிறது. அவற்றை நாம் விலக்குவதோடு, கண்டிக்கவும் கூட கடமைப்பட்டுள்ளோம். விசுவாசமற்றவர்களை அல்லது தெய்வ பயமற்றவர்களை திருத்துவது அவசியம் எனவும், விசுவாசமுள்ள சகோதர்களின் ஐக்கியத்திலிருந்து அப்படிப்பட்டவர்களை அகற்ற வேண்டியதும் அதற்கு ஒரு வழி என நமது கர்த்தர் கூறுகிறார். (எபி 12:1-11; மத் 12:15-17). இப்படிப்பட்ட நடவடிக்கை நமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக இல்லாவிட்டாலும், அதை நாம் செயல்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

எதிர்மறை எண்ணங்களுக்கு சில எடுத்துக்காட்டுகளைக் கீழே காண்போம் :

"நாங்கள் இதை செய்ய இயலாது; நாங்கள் அதை செய்ய இயலாது. அவர்களை சந்திப்பதில் எந்த பலனும் ஏற்படாது; ஏனெனில் அவர்களுக்கு ஆர்வம் கிடையாது. அவர்களை அழையுங்கள், ஆனாலும் கூட்டங்களுக்கு அவர்கள் வரமாட்டார்கள். நமது நேரத்தை வீணடிக்கும் வேலை தான் அது". இத்தகைய முடிவுகளுக்கு நாம் எப்படி வந்தோம்? ஒருவேளை, இவற்றில்

சிலவற்றை அனுபவித்திருப்போம். ஆனாலும் இவைகளில் பல எதிர்மறை நிலைப்பாடுகளை பிறரிடமிருந்து எடுத்துக் கொண்டிருப்போம். பலர் தாங்களாக எதையும் செய்ய விரும்புவதில்லை; பிறர் செய்வதையும் தாங்கள் விரும்புவதில்லை. எனவே ''எந்தக் காரியமும் நடக்கப் போவதில்லை'' என்று முடிவாக கூறி விடுகின்றனர். எந்தக் காரியத்திலும் ஈடுபடாமல் தப்பித்துக் கொள்ள இது ஒரு எளிதான வழி. நாம் செய்யும் எந்தக் காரியமும் உண்மையிலேயே எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தி விடாது என நம்மைத்தாமே திருப்திப்படுத்திக் கொண்டால், நாம் எதையும் செய்யாவிட்டாலும் அதற்காக நமது மனசாட்சி அலட்டிக் கொள்வதில்லை. ஆனால் அங்கே தான் நாம் தவறு செய்கிறோம்.

ஒரு தொழிலதிபர் வாழ்வை அந்தக் கண்ணோட்டத்தில் பார்ப்பதில்லை. மேலே கூறிய காரணங்களை ஒரு விற்பனை பிரதிநிதியும் கூறுவதில்லை. தங்கள் உற்பத்திப் பொருளை எல்லோருக்குமே விற்க முடியாவிட்டாலும், அவர்கள் சோர்ந்து போவதில்லை. அவர்கள் முயற்சி தொடர்கிறது; பலருக்கும் தங்கள் பொருட்களை விற்று, தொழிலில் நிலைத்து நிற்க முடிகிறது வாழ்விற்குத் தேவையானவற்றையும் பெறமுடிகிறது. முயற்சியை கைவிட்டால், தொழிலில் தோல்வி ஏற்படுகிறது. அதை அடுத்து, சாப்பாட்டிற்கே தாளம் போட வேண்டிய நிலை வந்துவிடும். நமது நாமகரண சபைகளின் 'நண்பர்கள்' கூட வேதாகமத்தில் காணப்படாத தங்களுடைய மத நம்பிக்கைகளை மக்களிடம் தொடர்ந்து போதித்து பலரை தங்கள் பக்கமாக இழுத்துக் கொள்வதில் வெற்றி அடைகின்றனர். ஏனெனில், தங்களுடைய மதக் கொள்கைகளை அவர்கள் உண்மையாகவே நம்புகின்றனர். எனவே தங்கள் முயற்சியில் தொடருகின்றனர்.

கிறிஸ்துவில் என் சகோதர, சகோதரியே! உலகக் காரியங்களில் நாம் சாதனைகள் புரிவது போல, கர்த்தருக்கு அடுத்த காரியங்களிலும் நாம் அவ்வாறு செயல்படவேண்டாமா? உலகத்தில் நாம் செய்யும் தொழிலையோ, வேலையையோ விட்டுவிடாமல் தொடர்ந்து அதில் நீடிக்கவில்லையா? ஏனெனில் நம்மையும் நமது குடும்பத்தையும் காப்பாற்றிக் கொள்ள நமது தொழில் அல்லது வேலையில் திறமையைக் காட்டி அதில் நீடித்திருக்க வேண்டிய அவசியம் இருக்கிறது அல்லவா? ஆனால் அடுத்த வேளை உணவுக்கு நமது ஆவிக்குரிய காரியங்களைச் சார்ந்திருக்க அவசியமில்லை என்பதால், ஒருவேளை அதை விட்டுவிட்டு ஓடுவது எளிதாக இருக்கலாம் என்ற போதிலும், நாம் உணர்ந்தாலும் உணராவிட்டாலும், நமது

ஆவிக்குரிய செயல்களில் நிலைத்திருந்து அவைகளில் அடையும் வெற்றியானது, உலக காரியங்களில் பெறும் வெற்றியைவிட எவ்வளவோ சிறந்தது என்பதை புரிந்து கொள்ளவேண்டும்.

எப்படியிருப்பினும், கிறிஸ்தவர்களாகிய நாம் எதிர்மறை எண்ணங்களைத் தவிர்த்து, சீரான எண்ணங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியம். பவுல் கூறுவதைப் போல, ''என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு'' (பிலி 4:13). கவனியுங்கள். நமது கர்த்தரின் வாக்குத்தத்தம் நம்மோடு உள்ளது; மக்களின் இருதயங்களையும் ஆத்துமாக்களையும் குத்தக் கூடிய ஆவிக்குரிய ஈட்டியாகிய தேவனுடைய வசனம் நம்மிடம் உண்டு; கர்த்தரை விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படியும் சகல மக்களையும் இரட்சிக்க வல்ல சக்தி படைத்த நற்செய்தி நம்மிடம் இருக்கிறது. என்றபோதிலும், மக்களை அணுக முடியவில்லையென்றும், அவர்களுக்கு விருப்பமில்லை என்றும் நீங்கள் கூறுகிறீர்களோ? ஒருவேளை, நமது சொந்த வாழ்க்கை, நமது நோக்கங்கள், நமது முயற்சிகள் இவை அனைத்தையும் பற்றிய ஒரு கணக்கெடுப்பு தேவைப்படலாம். ஒருவேளை உங்கள் உற்சாகமின்மைக்குக் காரணம் அங்கே காணப்படலாம்!

சில வேளைகளில் சகோதரர்கள் மக்களை அலட்சியப்படுத்துவதும், சந்தேகக் கண்களுடன் அவர்களைப் பார்ப்பதும், அவர்களுடைய நோக்கங்களைப் பற்றி கிளறிக் கொண்டிருப்பதும், அவர்களுடைய நேர்மையை சந்தேகிப்பதும் உண்டு. உண்மைதான், சிலர் நமக்கு ஏமாற்றத்தை அளிக்கக் கூடும். ஆனால் பலரோ நம்மை ஏற்றுக்கொள்ளக் கூடியவராயிருப்பர். குறிப்பிட்டு கூறுவதாயின், கிறிஸ்து எல்லோரையும் தன்னிடம் அழைத்தது போல, நாமும் சகலரையும் அவரிடம் அழைக்கவேண்டும்.

நாம் செய்ய விரும்புவதை செயலாக்க முடியும். நாம் எவ்வளவு தூரம் செல்லமுடியுமோ, அதுவரை செல்லலாம். மனந்திருப்புதலில், நாம் கடைபிடிக்கும் ஒரு வழி பயனளிக்காவிட்டால் வேறு வழியைக் கடைபிடிக்க வேண்டும். ஆனால் கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருபோதும் ஆத்தும ஆதாயத்திட்டத்தைக் கைவிட்டு விடலாகாது. நமக்கு இருப்பது ஒரே ஒரு வழிதான், அது முன்நோக்கிச் செல்வதே. சீராக சிந்திப்போம், சீராக செயல்படுவோம் சீரான பலன்களைப் பெறுவோம். முயன்று பாருங்கள், அது வேலை செய்யும்!

J.C. சோட்

**பெண்கள் பகுதி**

# தன் கணவனை ஆண்டவனே என அழைத்தாள்

ஊர் என்ற கல்தேயருடைய பட்டணத்தில் வாழ்ந்த பெண்களுள் சாராள் மிகவும் அழகுள்ளவளாக இருந்தாள். அந்த ஊர் இன்று ஈராக் நாட்டில் உள்ளது. அவள் ஆபிரகாம் என்ற தனவானுக்கு திருமணத்தின் மூலம் மனைவியாக ஒப்புக் கொடுக்கப்பட்டிருந்தாள்.

சாராள் எப்படிப்பட்ட பெண்? அழகு தான் அவளுக்கிருந்த சொத்தா? வேத வசனங்களிலிருந்து அவளைப் பற்றி நாம் என்ன தெரிந்து கொள்ள முடியும்?

சாராள் தன் கணவனை நேசித்தாள். மதித்து நடந்தாள். 1 பேதுரு 3:6-ம் வசனம் ''சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி......'' என்கிறது. தன்னுடைய வாழ்க்கையில் தன் கணவனுக்கு எப்படி தன்னை அர்ப்பணித்திருந்தாள் என்பதை இந்த வசனப்பகுதி மெய்யாய் சித்தரிக்கிறது. தேவன் ஆபிரகாமை அழைத்து தன்னுடைய வீட்டையும், ஜனத்தையும் விட்டு வா என்று கூறியபொழுது சாராள் முழுமனதோடே எந்த முணுமுணுப்பும் இன்றி அவனுடனே சென்றாள். தாளமுடியாத வெப்பம் பஞ்சம், கூடார வாழ்க்கை இவைகளுக்கு மத்தியில் நீண்ட பிரயாணம் ஒரு பெண்ணுக்கு எப்படியிருந்திருக்கும்? ஆனால் தன் கணவன் எங்கெல்லாம் அழைத்துச் சென்றானோ அங்கெல்லாம் அமைதியாகவே அவள் சென்றாள். அவளுடைய வாழ்க்கை முழுவதும் அவளுக்கு நிலையான ஒரு குடியிருப்பு இருந்ததாக வேதாகமத்தில் சொல்லப்படவில்லை. அதேபோல் அவள் அதை பெருங்குற்றமாக நினைத்துப் புலம்பினாள் என்பதையும் வேதாகமத்தில் நாம் காணமுடியாது.

இந்தவிதமான மனப்பான்மையோடு கிறிஸ்தவப் பெண்கள் தங்கள் கணவன்மார்களுக்கு கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் (1 பேதுரு 3:5). சாராள் மிகுந்த அழகுள்ளவளாக இருந்தபொழுதும் கண்ணியத்திற்கும், அடக்கத்திற்கும் அவள் சிறந்த எடுத்துக்காட்டாயிருந்தாள். இதே அதிகாரம் 4-ஆம் வசனம் புறம்பான அலங்கரிப்பு கிறிஸ்தவப் பெண்களுக்கு கூடாது என்றும், இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக் கடவது என்றும் சொல்கிறது.

"அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்த புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள். அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்படியாதவர்களாயிருந்தால் பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப் படுவார்கள். மயிரைப் பின்னி பொன்னாபரணங்களை அணிந்து உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது.

சாராள் தன் கணவனுடைய விருப்பங்களையெல்லாம் நிறைவேற்ற கட்டாயப்படுத்தப்பட்டாளா? இல்லை. அவர்கள் அந்நியதேசத்தில் குடியிருந்த நாட்களில் சாராளின் அதிகப்படியான அழகு, தன் உயிருக்கு ஆபத்தை விளைவித்து விடுமோ என இரண்டு சந்தர்ப்பங்களில் ஆபிரகாம் பயந்து விடுகிறான். "அவன் எகிப்துக்குச் சமீபமாய் வந்தபோது தன் மனைவி சாராளைப் பார்த்து நீ பார்வைக்கு அழகுள்ள ஸ்திரீ என்று அறிவேன். எகிப்தியர் உன்னை காணும்போது இவள் அவனுடைய மனைவி என்று சொல்லி, என்னைக் கொன்று போட்டு உன்னை உயிரோடே வைப்பார்கள். ஆகையால் உன்னிமித்தம் எனக்கு நன்மை உண்டாகும்படிக்கும், உன்னாலே என் உயிர் பிழைக்கும்படிக்கும் நீ உன்னை என் சகோதரி என்று சொல் என்றான்" (ஆதியாகமம் 12:11-13).

தேவையற்ற பயத்தின் காரணத்தால் ஆபிரகாம் தன் உயிரை காப்பாற்றிக் கொள்ள நடந்து கொண்ட விதம் கோழைத்தனமானது என்பதை நாம் ஒப்புக்கொள்ளவே வேண்டும். இது தன்னை அழைத்து வந்த தேவன் மீது ஆபிரகாமுக்கு போதுமான விசுவாசமும், பற்றும் இல்லை என்பதைத்தான் காட்டுகிறது. தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள தன் மனைவியிடத்தில் மன்றாடின முறை ஒரு கணவன் தன் மனைவியினிடத்தில் கேட்டுக் கொள்ளும் முறைக்கு சற்று மாறாக இருந்தது.

சாராள் ஒரு தெய்வ பயமுள்ள பெண்ணாக இருந்த படியால், தன் கணவனின் உயிரைக் காப்பாற்றுவதன் மூலம் தனக்கு அபாயம் ஏற்பட்டாலும் பரவாயில்லை என்று நினைத்து விருப்பத்தோடே தன் கணவனின் வேண்டுகோளுக்கு கீழ்ப்படிந்தாள்.

ஒரு கட்டத்தில், சாராள் தேவன் மேல் பொறுமையாய் காத்திருக்க வேண்டிய விஷயத்தில் மனுக்குலம் அனைத்தும் செய்யும் தவறையே தானும் செய்துவிட்டாள். தேவன் ஆபிரகாமிடம் சாராள் மூலமாக ஒரு புத்திரனை கொடுப்பதாக வாக்குக் கொடுத்திருந்தார். 10 வருடங்கள் கடந்து விட்டன. ஆனால் பிள்ளைப் பாக்கியம் இல்லை இந்த பிரச்சனையைத் தீர்ப்பதற்கு சாராள் எடுத்த முடிவைப் பற்றி ஆதியாகமம் 16ம் அதிகாரத்தில் நாம் காணலாம். ஸ்திரீகளுக்குண்டான வழிபாடு நின்றுபோன நிலையில், தான் குடியிருந்த தேசத்தின் வழக்கத்தின் படியாக, தன் வேலைக்காரியை, ஆபிரகாமோடே சேரும்படி செய்கிறாள். அதன் மூலம் பெறப்படும் குழந்தையை தன்னுடைய தாக்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு இவ்வாறு செயல்படும்படி செய்கிறாள். வேலைக்காரி கர்ப்பம் அடைந்தவுடன் தன் நாச்சியாரை அற்பமாக எண்ணிவிடுகிறாள். இஸ்ரவேல் என்ற மகன் பிறந்து, வளர்ந்து, தேவன் ஆபிரகாமுக்கும், சாராளுக்கும் வாக்குத்தத்தின் புத்திரனாக கொடுத்த ஈசாக்கை பரியாசம் பண்ணுமளவிற்கு நிலை வந்து விட்டது. விளைவாக இஸ்ரவேலின் சந்ததிக்கும், ஈசாக்கின் சந்ததிக்கும் ஏற்பட்ட விரோதமானது, இன்று 3500 ஆண்டுகள் கழித்தும் அரேபியர்களுக்கும், இஸ்ரவேலருக்கும் இடையே விரோதமாக தொடர்ந்து வருகிறது.

சில சமயங்களில் பக்தியுள்ள பெண்களே கூட ஆண்டவருக்காக காத்திருக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் பொறுமையிழந்து, விசுவாசத்தில் ஆட்டம் கண்டு விடுகின்றனர். சாராள் செய்வதைப் போல ஆண்டவருடைய காரியத்தில் நாம் தலையிட்டு காரிய மாற்றி, பல பிரச்சனைகளை உண்டாக்கி விடுகிறோம். ''கர்த்தருக்குக் காத்திரு. அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து கர்த்தருக்கே காத்திரு'' என சங்கீதம் 27:14-ல் கூறுவதுபோல் காத்திருக்கும் விஷயத்தில் ஞானமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

எபிரேயர் 11ம் அதிகாரத்தில் விசுவாசிகளின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. ஆபிரகாமின் பெயர் இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளது. அதைப்போல சாராளின் பெயரும் இடம் வகிக்கிறது. ''விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி, கர்பந்தரிக்கப் பெலனடைந்து, வயது சென்றவளாயிருந்தும் பிள்ளை பெற்றாள்''. (எபிரேயர் 11 11) இந்த வசனத்தின் மூலம் ஆபிரகாம் எப்படி தேவன் மீது விசுவாசம் வைத்திருந்தானோ அதைப்போலவே, சாராளும் விசு

வாசம் வைத்திருந்தாள் என்பதை முக்கியமாக நாம் உணரவேண்டும் தன்னுடைய கணவனின் விசுவாசத்தை அடிப்படையாக வைத்து ஒரு பெண் இரட்சிக்கப்படுவதோ அல்லது அவருடைய விசுவாசம் கணக்கிடப்படுவதோ கிடையாது. தன்னுடைய சொந்த விசுவாசத்தின்படியாகவும், தேவன் மீது இருக்கும் தன் சொந்த உறவின் அடிப்படையிலும் தான் அவள் வாழவேண்டும். அவள் மரிக்கவேண்டும்.

இவைகளை நாம் சாராளின் விசுவாச வாழ்க்கையிலிருந்து கற்றுக் கொள்வோமாக!

பெட்டிபர்ட்டன் சோட் ரேச்சல் ராஜநாயகம்

**ஓர் தகப்பனின் அனுபவ ரீதியான அறிவுரை**

என் மகனே, என் போதகத்தை மறவாதே; உன் இருதயம் என் கட்டளைகளைக் காக்கக் கடவது.

அவைகள் உனக்கு நீடித்த நாட்களையும் தீர்க்காயுசையும்; சமாதானத்தையும் பெருகப் பண்ணும்.

கிருபையும் சத்தியமும் உன்னைவிட்டு விலகாதிருப்பதாக, நீ அவைகளை உன் கழுத்திலே பூண்டு அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக் கொள்.

அதனாலே தேவனுடைய பார்வையிலும், மனுஷருடைய பார்வையிலும் தயையும், நற்புத்தியையும் பெறுவாய்.

உன் சுயபுத்தியின் மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தர் மேல் நம்பிக்கையாயிருந்து உன் வழிகளெல்லாம் அவரை நினைத்துக் கொள் அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப் படுத்துவார்.

நீ உன்னை ஞானியென்று எண்ணாதே, கர்த்தருக்குப் பயந்து, தீமையை விட்டு விலகு.

அது உன் நாபிக்கு ஆரோக்கியமும், உன் எலும்புகளுக்கு ஊனுமாகும்,

உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரை கனம் பண்ணு.

அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும் உன் ஆலைகளில் திராட்சை ரசம் புரண்டோடும்.

நீதி : 3;1-12

# பரலோகத்திற்குப் பலவழிகள் உண்டா?

தாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்ற மத நம்பிக்கையில் உண்மையுள்ளவர்களாகவும், நேர்மையுள்ளவர்களாகவும் இருந்தால் போதும். அந்த நம்பிக்கை, இறுதியில் தங்களைப் பரலோகத்திற்கு அழைத்துச் செல்லும் என்று பலர் நம்புகின்றனர். இவர்கள் தங்கள் செயல் அவ்வளவு முக்கியமானதல்ல என்றும் நம்புகின்றனர்.

மொத்தத்தில், எந்த தேவன் தங்களைப் படைத்தாரோ, எந்த தேவனுக்கு விரோதமாக மனுக்குலம் முழுவதும் பாவம் செய்ததோ அந்தத் தேவனை, ஆராதிப்பதன் மூலம் பிரியப்படுத்த மனுக்குலம் முயற்சிக்கிறது இருப்பினும் மத ரீதியாக உலகமானது பிரிந்து கிடக்கின்றதை நாம்காண்கிறோம். வித்தியாசமான தோற்றங்களைக் கொண்ட மார்க்கங்களும், அவை ஒவ்வொன்றுக்கும் பலவிதமான நம்பிக்கைகளும் உண்டு. கிட்டத்தட்ட உலகிலுள்ள எல்லாமார்க்கங்களிலும் நல்லவர்களும், நேர்மையாளர்களும் நிறையவே இருக்கிறார்கள். தங்களால் முடிகின்ற அளவுக்கு தேவனுக்குப் பிரியமாய் இருக்க வேண்டுமென்றே விரும்புகின்றனர். பூமிக்குரிய இந்த வாழ்வை முடித்துச் செல்லும் பொழுது, தேவன் அவர்களுக்காகப் பரலோகத்தின் கதவைத் திறப்பார் என்று நம்புகின்றனர். ஆனால் உண்மையென்னவெனில், ஒருவன் உண்மையாளனாகவும், நேர்மையாளனாகவும் இருந்தாலே அவன் சரியானவனாக இருக்கிறான் என்று அர்த்தமாகாது. எப்படியெனில், விஷம் நிறைந்த ஒரு பாட்டிலை, அதன் மீது ஒட்டப்பட்டுள்ள தவறான சீட்டைப்பார்த்து, அது மருந்துதான் என்று எண்ணி ஒருவன், அருந்துவானானால், அவன் மரிக்கவேசெய்வான் விஷத்தை மருந்து என்று, அவன் உண்மையாக எண்ணி குடித்தபடியால் விஷம் தன்னுடைய வேலையைச் செய்யாமல் இருக்குமா? இருக்காது.

அவ்வப்பொழுது உலகத்தில் பலவிதமான மோசடிகள் நடந்து கொண்டே உள்ளது. அவைகளின் வெளிவேஷம் எப்படிப்பட்டதாக இருந்த போதிலும் அந்த மோசடிகளை உண்மையென்று நம்புகிற மக்களிடமிருந்து லட்சக்கணக்கில் பணம் அபகரிக்கப்படுகிறது. அதைப் போலவே, மார்க்க ரீதியாகக் கூட, தவறான காரியங்களை நம்பி, நித்தியத்தை இழந்து போக வாய்ப்புண்டு. சமீபத்தில் கொரியா தேசத்தில் நடந்துவிட்ட ஒரு நிகழ்ச்சியை எண்ணிப்பாருங்கள். அவர்கள் பொய்யான மத போதனைகளை ஏற்று, 1992-ம் ஆண்டு அக்டோபர் 28-ம்நாள் இரவு 8,30 மணிக்கு இயேசுவருவார்

என நம்பினர். அவர்கள் அநேகரைக் காட்டிலும் பக்தியிலும், ஜெபிப்பதிலும் சிறந்தவர்கள். உண்மையாகவே, இயேசுவானவர் அவ்வேளையில் தங்கள்முன் தோன்றுவார், நாம் ஆனந்தப் பரவசமடையலாம் என விசுவாசித்தனர். கிறிஸ்துவுக்காகக் காத்துக் கொண்டிருக்கையில், பாட்டுப்பாடி, ஜெபித்து வேதம் வாசித்துக் கொண்டிருந்தனர். ஆனால் அவரோ அவர்கள் எதிர்பார்த்ததைப் போல வரவில்லை. தங்களுக்கிருந்த பக்தி வைராக்கியத்தினிமித்தம் அவர்களில் அநேகர் உத்தியோகங்களைத் தூக்கியெறிந்து விட்டார்கள். பிள்ளைகள் பள்ளி செல்வதற்குத் தடைவிதித்துவிட்டார்கள். கிறிஸ்துநாதர், வந்து தங்களைப் பரலோகத்திற்கு அழைத்துச் செல்லப்போகிறார், ஆகவே சொத்துச் சுகங்கள் தேவையில்லை என்று விட்டுவிட்டனர். இவர்கள் யாவரும் உண்மையுள்ளவர்கள் ஆனால் பொய்யை உண்மையென நம்பி ஏமாந்து விட்டவர்கள்.

உண்மைக்கும், நேர்மைக்கும் சொந்தக்காரர்கள் கூட தவறானவர்களாகவும் இருக்க முடியும் என்பதற்கு வேதாகமத்தில் பல உதாரணங்கள் உண்டு. பழைய ஏற்பாட்டில், முற்பிதாக்களில் ஒருவனாகிய யாக்கோபு, உயிரோடிருக்கும் தனது மகன் யோசேப்பை, மரித்துப் போய்விட்டான் என உண்மையாகவே மனதார நம்பினான். ஏனெனில், அவனுடைய மற்ற மகன்கள் யோசேப்பு துஷ்ட மிருகங்களால் பீறுண்டு செத்துப் போனான் என்பதற்கு ஆதாரமாக, அவனுடைய பலவருண அங்கிகளை இரத்தம் தோய்ந்த நிலையில் கொண்டு வந்து காட்டினார்கள் ஆதி 27:31-33) ஆனால் உண்மை என்ன? யோசேப்பு மரிக்கவில்லை (உயிரோடிருந்தான். புதிய ஏற்பாட்டில் மார்க்க ரீதியாக தாங்கள் செய்தது, தவறாக இருந்தும் அதை சரி என நம்பியதற்கு உதாரணமாக எத்தியோப்பியா மந்திரியையும், பவுலாகிய சவுலையும் காட்டலாம் ஆனால், அவர்களுடைய மதநம்பிக்கை தவறாக இருந்தபடியால், அவர்கள் அதை மாற்றிக் கொள்ள வேண்டுமெனச் சொல்லப்பட்டார்கள். பவுல் பின்னாளில், அதைக் குறித்துச் சொல்லும்போது, "முன்னே நானும் நசரேனாகிய இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்க வேண்டுமென்று நினைத்திருந்தேன் அப்படியே நான் எருசலேமிலும் செய்தேன் ........ (அப் 26:9-11) மறுபடியும் வேறொரு இடத்தில் அதே பவுல், "என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன். முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தேன் அப்படி-

யிருந்தும், நான் அறியாமல் விசுவாசத்தினாலே அப்படி செய்த-படியினால் இரக்கம் பெற்றேன் (1திமோத் 1:12.13) என்று சொல்-கிறார்.

நீதிமொழிகள் புத்தகத்தில் ஞானி சொல்வதை கவனமாகப் படியுங்கள். ''மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்''. (நீதி 14:12)

நமதாண்டவர், வீட்டைக் கட்டுகிற புத்தியுள்ள, புத்தி-யில்லாத இரண்டு மனிதர்களைப் பற்றிச் சொல்லி, அங்கே ஒரு அருமையான கருத்தை நாம் அறிந்து கொள்ளச் செய்கிறார். அவர் ''பரலோகத்திலிருக்கிறஎன் பிதாவின் சித்தத்தின்படி செய்-கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! உனது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்-களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள் அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை, அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லு வேன். ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷ-னுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின் மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்-பட்டிருந்தது. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின் மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்-பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்.

மேற்சொன்ன கதையின் மூலமாக, இயேசுகிறிஸ்து ஒரு முக்கியமான உண்மையை வெளிப்படுத்துகிறார் தேவனுடைய நாமத்தினாலே தாங்கள் செய்வதெல்லாம் தேவனாலே ஏற்றுக்-கொள்ளப்படும் என்று அநேகர் தவறாக நம்பிக்கொண்டிருக்கின்-றனர் என்பதே அந்த உண்மை. இந்தத் தவறான நம்பிக்கை இப்படிப்பட்டவர்களை நியாயத்தீர்ப்பின் நாளில் காப்பாற்றப்

நித்திய நரகத்திற்குத்தான் செல்வார்கள். ஏனெனில் அவர்கள் தங்கள் செய்கையில் ஞானமற்றவர்களாக நடந்து விசாலமான வழியில் சென்றவர்கள் (மத் 7:13)

தேவனுக்கும், மனுஷனுக்கும் மத்தியஸ்தம் செய்யும்படி தேவன் இயேசுகிறிஸ்துவை ஏற்படுத்தியுள்ளார். அவர் மூலமாக மட்டுமே ஒவ்வொருவரும் தேவனிடத்தில் ஒப்புரவாக முடியும் (I தீமோத் 2:5, 2கொரி 5:19-21) அவர் தான் வழி (யோவா 14:6) அவர் மூலமாக, நாம் இரட்சிப்புக்கு என்ன செய்ய வேண்டு-மென்பதை அறிகிறோம். (மாற் 16:16). தேவன் ஏற்றுக் கொள்-ளும்படியான ஆராதனையை எப்படி ஏறெடுக்க வேண்டும் என்று அவர் நமக்கு போதித்துள்ளார். (யோவா 4:24) நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ளார் (Iபேது 2:24) அவர் சொல்வதைக் கேட்பதும், அதன்படி செய்வதுமே நமது கடமையாகும். அவர் சொல்வதை அட்சரம்பிசகாமல், அப்படியே செய்வதின் மூலம் தான் நம்முடைய பாதையை நீதியின் பாதை என்றும் பரலோகத்திற்கு வழிகாட்டும்பாதை என்றும் நாம் உறுதி செய்ய முடியும். அப்படிச் செய்ய தேவன்நமக்கு உதவி செய்வாராக.

Sunny David RAJANAYAGAM

## புதிய ஏற்பாட்டு மார்க்கம்

புதிய ஏற்பாட்டு மார்க்கம் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் மூலம் உண்டாயிற்று: அதாவது அவரையே எக்காலத்திலும் ஒரே தலைவரும், போதகருமாக ஏற்றுக்கொண்டிருப்பது.

பக்தி உணர்வோடு, தேவனைத் தேடும் இன்றைய மக்களின் அத்தியாவசியத் தேவை எது?

- முதல் நூற்றாண்டு கிறிஸ்துவின் சபை :
- முதல் நூற்றாண்டில் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம்
- முதல் நூற்றாண்டுப் புதிய ஏற்பாட்டு மார்க்கம்

# மனிதன் எப்படிப்பட்டவன்?

## What is Man?

சங்கீதக்காரனாகிய தாவீது சொல்வதைக் கேளுங்கள், "எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது! உம்முடையமகத்துவத்தை வானங்களுக்கு மேலாக வைத்தீர். பகைவனையும், பழிகாரனையும் அடக்கிப்போட, தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தம் குழந்தைகள், பாலகர் வாயினால் பெலன் உண்டு பண்ணினீர். உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்தசந்திரனையும் நட்சத்திரங்களையும் நான்பார்க்கும் போது மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷ குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன். நீர் அவனை தேவ தூதரிலும் சற்று சிறியவனாக்கினீர். மகிமையினாலும், கனத்தினாலும் முடிசூட்டினீர் உம்முடைய கரத்தின் கிரியைகளின் மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர். ஆடுமாடுகளெல்லாவற்றையும், காட்டு மிருகங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்து மச்சங்களையும், கடல்களில் சஞ்சரிக்கிறவைகளையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர். எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது! (சங்கீதம் 8)

மனிதன், பாவியான நிலையிலும் கூட, தேவன் தமது குமாரனை அனுப்பி, அவரை கொடுமையான சிலுவை மரணத்தை ஏற்று மரிப்பதற்கு ஒப்புக் கொடுக்க விருப்பமுள்ளவராகவே இருந்தார் என்பதை நாம் காணலாம் (யோவா 3:16,17) தேவன் ஏன் இதைச் செய்தார்?

தேவனுடைய பார்வையில் மனிதன் ஏன் அவ்வளவு முக்கியமானவனாகக் கருதப்பட்டான் என்பதை வேத வசனங்களின் வெளிச்சத்தில் ஆராய்ந்து தீர்மானிக்க முயற்சி செய்வோம்.

1. தேவன், மனிதனை பூமியின் மண்ணினாலே சிருஷ்டித்தார். ஆதி 2:7ல், தேவனாகிய கர்த்தர் மனிதனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி...... என்று பார்க்கிறோம் ஆகவேதான், மனிதன் சரீரப்பிரகாரமாய் மரிக்கும் பொழுது, அவனுடைய சரீரம் பூமியின் மண்ணுக்கு திரும்புகிறது என்று பிரசங்கி சொல்கிறான் (பிர 12:7).

2. சரீரப்பிரகாரமாக, மனிதன் முழுமையானவன் அல்ல. ஆகவே தான், மனுஷியை துணையாக இருக்கும்படி தேவன் படைத்தார். ''பின்பு தேவனாகிய கர்த்தர், மனிதன் தனியாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்'', என ஆதியாகமத்தில்வாசிக்கிறோம்(ஆதி 2:18). தொடர்ந்து வாசிப்போமானால், வேதாகமம் இப்படியாகச் சொல்கிறது ''அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார். அவன் நித்திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தை சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார். அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கபட்டபடியினால் மனுஷி எனப்படுவாள் என்றான். இதனிமித்தம் புருஷன் தன் தகப்பனையும், தன் தாயையும் விட்டு தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்'' (ஆதி 2:21-24).

இங்கே, மனிதனும் மனுஷியும் ஒன்றாக இருக்கும்போது முழுமை அடைகிறார்கள். அவர்கள் ஒன்றாக வாழ முடிகிறது. ஒருவருக்கொருவர் உதவிசெய்ய முடிகிறது. இனப்பெருக்கமும் அவர்களால் முடிகிறது. பிள்ளைகள் பிள்ளைகளின் பிள்ளைகள் என்று தலைமுறைகள் தொடர்கிறது. கொரிந்தியருக்கு எழுதும்பொழுது பவுல் சொல்வதைக் கேளுங்கள். ''புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றினவன் அல்ல, ஸ்திரீயே புருஷனிலிருந்து தோன்றினவள். புருஷன் ஸ்திரீக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவன் அல்ல. ஸ்திரீயே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவள் (I கொரி 11:8,9). மேலும், ''ஆகிலும் கர்த்தருக்குள் ஸ்திரீயல்லாமல் புருஷனுமில்லை, புருஷனில்லாமல் ஸ்திரீயுமில்லை, ஸ்திரீயானவள், புருஷனிலிருந்து தோன்றுகிறது போல புருஷனும் ஸ்திரீயினால் தோன்றுகிறான்: சகலமும் தேவனால் உண்டாயிருக்கிறது' என்கிறார் (I கொரி 11:11,12). இந்த வசனங்கள் மூலம் ஆணும், பெண்ணும் ஒருவரையொருவர் சார்ந்திருக்கிறார்கள் என்றும் அப்படிச்சார்ந்திருப்பது அவர்களைமுழுமையாக்குகிறது என்றும் காணலாம். வேதாகமம், மனிதனைக் குறித்து பேசும்பொழுது, அடிக்கடி பொதுப் படையாகவே பேசுகிறது. அப்படிப் பேசுவது ஆணையும், பெண்ணையும், மனுஷனையும், மனுஷியையும் குறிக்கிறது என்பது தான் அதன் பொருள்.

3. தேவனுடைய படைப்புகளில் மனிதன் கிரீடமானவன் அவனுக்குள்ளாக தேவன் ஆத்துமாவைக் கொடுத்துள்ளார். தேவன், வானத்தையும் பூமியையும், மிருகங்களையும், பறவைகளையும்,

நீர்வாழ் ஜந்துக்களையும் உண்டாக்கியிருக்கிறார் என்பதை நாம் அறிவோம். ''பின்பு தேவன் நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும் பூமியின்மேல் வளரும் சகல பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். அவனை தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும், பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார் (ஆதி 1:26,27)

''நமது சாயலாக'' என்று தேவன் சொன்னதை நாம் குறிப்பாக கவனிக்க வேண்டும். 'நமது' என்பது தேவன், கிறிஸ்து பரிசுத்த ஆவியானவர் இவர்கள் மூவரையும் குறிக்கிறது. இவர்கள் வானமும் பூமியும் உண்டாக்கப்பட்டபொழுது இருந்தனர் (ஆதி 1:1). மறுபடியும் தேவன் சொல்வதைக் கேளுங்கள். ''நமது சாயலாக உண்டாக்குவோமாக''. அதன் பொருள் என்னவெனில், தேவன் ஆவியாயிருக்கிறபடியினால் (யோவா 4:24) மனிதனுக்கு ஆவியும் ஆத்துமாவும் கொடுக்கப்பட்டது. மனிதன், தேவனைப் போலவே சரீரப் பிரகாரமாகப் படைக்கப்பட்டான் என நாம் பொருள் கொள்ளமுடியாது. ஏனெனில், தேவனுக்கு மாம்சத்தால் ஆன சரீரம் இல்லை. தேவன், மனிதனை சரீரப் பிரகாரமாக உண்டு பண்ணி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான் (ஆதி 2:7). மேலும் மனிதன் சரீரப் பிரகாரமாக மரிக்கும்பொழுது, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் திரும்பப் போகிறது என்று காண்கிறோம் (பிர 12:7)

4) மனிதனின் ஆத்துமா நித்தியத் தன்மை உடையது. அது உள்ளான மனுஷன் என்று அழைக்கப்படுகிறது (II கொரி. 4:16). மாத்திரமல்ல 'வானத்திற்குரிய சரீரம்' என்றும் அழைக்கப்படுகிறது (I கொரி. 15:47-49). கிறிஸ்துவானவர், இன்னும் தெளிவாகச் சொல்வதைக் கவனியுங்கள். ''ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு, நீங்கள் பயப்பட வேண்டாம். ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள் (மத் 10:48). தேவனிடத்திலிருந்து பிரிக்கப்படுவதன் மூலமாக ஆத்துமாவானது மரிக்கமுடியும். ஆனால், ஆத்துமாவானது அதன் ஜீவிக்கும் தன்மையிலிருந்து ஒருபோதும் மரிக்கமுடியாது. ஆகவே தான், ஆத்துமாவானது உலகம் முழுமையும் காட்டிலும் விலையேறப்பெற்றது. (மத் 16:26) மனிதன் கர்த்தருடைய வார்த்தை

யைக் கேட்க விருப்பமுற்று, அவரைப் பின்பற்றி அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியும் பொழுது, தன்னுடைய பாவங்களிலிருந்து இரட்சிப்பைப் பெற்று, நித்திய வாழ்க்கைக்குரிய நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ளமுடியும் (மத் 17:5; லூக் 9:23, மாற் 16:16, யோவா 14:1-3)

5. மனிதன் தேவனை ஆராதித்து, அவருக்குச் சேவை செய்து, மரண பரியந்தம் அவருக்கு உண்மையுள்ளவனாக இருக்க வேண்டும் (யோவா. 4:24, மத் 6:24, வெளி 2:10). அவருடைய நாமத்தினாலே, இவைகளைச் செய்யும்பொழுது, தேவனுக்கு கனத்தையும், மகிமையையும் கொண்டு வருகிறான் (கொலோ, 3:17). கர்த்தருடைய சபையில் அங்கமாக இருப்பதின் மூலமும் இதைச் செய்கிறான் (எபே 3:21).

6. மனிதன் சிறப்பான திறமைகளோடு தேவனால் படைக்கப்பட்டுள்ளான். அவனால் சிந்திக்கவும், கற்றுக்கொள்ளவும், சீர்தூக்கிப் பார்க்கவும், முடிவுகளை எடுக்கவும், தெரிந்தெடுக்கவும், விசுவாசிக்கவும், கீழ்ப்படியவும், ஆராதிக்கவும், பேசவும். உண்மையுள்ளவனாக இருக்கவும் முடியும். அது மாத்திரமல்ல, அவனால், ஒதுக்கவும், மறுத்தலிக்கவும், எதிர்க்கவும், கீழ்ப்படியாமலிருக்கவும், தேவனுடைய அண்மையும், இரட்சிப்பையும், மறுக்கவும் முடியும். தேவன் அவருடைய கிருபையையும், இரக்கத்தையும் ஏற்றுக் கொள்கிறவர்களை இரட்சித்து ஆசீர்வதித்து அவருக்காகக் காத்துக் கொள்கிறார் (எபே. 2:8,9).

7. மனிதன் தேவனுக்குக் (கணக்கொப்புவித்து, நித்தியத்தை பரலோகத்திலோ, நரகத்திலோ கழிக்க வேண்டும். யாரிடத்தில் அதிகம் கொடுக்கப்படுகிறதோ, அங்கே அதிகம் எதிர்பார்க்கப்படும். ரோமருக்கு பவுல் எழுதும்பொழுது, "ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும், தன்னைக் குறித்து தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான் என்கிறார் (ரோம 14:12) கர்த்தர், தன்னுடைய வார்த்தையைக் கொண்டு நம்மை நியாயந்தீர்ப்பார். (அப் 17:31, யோவா 12:47,48). நம்முடைய கிரியைகளுக்கேற்ப அது நன்மையாயினும், தீமையாயினும் நியாயந்தீர்க்கப்படுவோம் (II கொரி. 5:10). நீதிமான்களுக்கு நித்திய ஜீவனும் துன்மார்க்கருக்கு நித்திய ஆக்கினையும் கொடுக்கப்படும் (மத் 25:46).

மனிதன் எப்படிப்பட்டவன்? அவன் ஒரு இரட்டை மனிதன் அவன் சரீரமாயும், ஆவியாயும் உள்ளான். அவன் மாம்சமும்,

ஆவியும் உடையவன். அவன் அழியும் தன்மையுடையவனும், அழியாத்தன்மை உள்ளவனுமாயிருக்கிறான். அவன் மரணமும் அடைவான் வாழவும் செய்வான். நீ தான் அந்த மனிதன். நானும் அவன் தான் அவன் பூமியின் வாசி. ஆனால் இறுதியில் ஆத்துமாக்களின் நித்திய இருப்பிடத்திற்குச் சென்று-பரலோகத்திலோ அல்லது நரகத்திலோ வாழ்வான். மனிதன் எவ்வளவு பெரியவன் பாருங்கள். அதிக கனத்திற்குரியவன் அவன். ஆனால் அவனுடைய தேவை எவ்வளவு பெரியதென்றும் நாம் கவனிக்க வேண்டும். தேவனும், இரட்சிப்பும் மனிதனுக்கு அவசியத் தேவை தேவன், மனிதனை இரட்சித்து, பரலோகத்திற்கு அழைத்துச் சென்று எப்பொழுதும் அவரோடு வாழவேண்டுமென்று விரும்புகிறார் தேவனுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக குறிப்பாக நம்முடைய நன்மைக்காக நாம் அவரை ஏமாற்றாமலிருப்போம்.

J.C. சோட்

**மாயம் வேண்டாம் : மனந்திரும்பு**

நீங்கள் என் சந்நிதியில் வரும்போது, என் பிரகாரங்களை இப்படி மிதிக்க வேண்டுமென்று உங்களிடத்தில் கேட்டது யார்?

இனி வீண் காணிக்கைகளை கொண்டு வர வேண்டாம், தூபங்காட்டுதல் எனக்கு அருவருப்பாய் இருக்கிறது; நீங்கள் அக்கிரமத்தோடே ஆசரிக்கிற மாதப்பிறப்பையும், ஓய்வு நாளையும், சபைக்கூட்டத்தையும் நான் இனி சகிக்கமாட்டேன்.

உங்கள் மாதப் பிறப்புக்களையும் உங்கள் பண்டிகைகளையும் என் ஆத்துமா வெறுக்கிறது; அவைகள் எனக்கு வருத்தமாயிருக்கிறது; அவைகளை சுமந்து இளைத்துப்போனேன்.

நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும், என் கண்களை உங்களை விட்டு மறைக்கிறேன்; நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன்! உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கிறது.

உங்களை கழுவிச் சுத்திகரியுங்கள்; உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என்கண்களுக்கு மறைவாக அகற்றிவிட்டு தீமை செய்தலை விட்டு ஓயுங்கள்.

நன்மை செய்யப் படியுங்கள்! நியாயத்தைத் தேடுங்கள் ஒடுக்கப்பட்டவைகளை ஆதரித்து திக்கற்ற பிள்ளையின் நியாயத்தையும், விதவையின் வழக்கையும் விசாரியுங்கள்.

(ஏசாயா 1:12-17)

# திரும்பிச் செல்ல ஒரு வேண்டுகோள்

1800ம் ஆண்டின் ஆரம்பத்தில், அமெரிக்காவில் மத நம்பிக்கைகள், கொள்கைகள் பற்றி பல குரல்கள் ஒலிக்க ஆரம்பித்தன. இவையாவும் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்துக்கு மக்கள் திரும்பிச் செல்ல வேண்டிய அவசியத்தை அறிவுறுத்தும் அறை கூவல்களாக ஒலித்தன. இதற்கு முன்னர், ஐரோப்பாவில் தொடங்கிய சீர்திருத்த இயக்கம் தோற்றுப் போயிற்று. ரோமன் கத்தோலிக்க சபையை சீர்திருத்தும் முயற்சியில் இந்த இயக்கம் தொடங்கிற்று. லூதரும் பிற சிலரும் இணைந்து ரோமன் சபையை சீர் திருத்தி, பரிசுத்தப்படுத்தி, புனர் நிர்மாணம் செய்ய முயன்றனர். ஆனால் இம்முயற்சியின் விளைவோ மேலும் பல நாமகரண சபைகளும், பிரிவுகளும், தோன்றுவதில் தான் போய் முடிந்தது. எனவே, சீர்திருத்த இயக்கம் மதப்பிரிவினைகளின் பிரட்சனையை மேலும் குழப்புவதற்கே பயன்பட்டது.

### நாம் வந்த வழியை நோக்கி....

மதப் பிரிவினைகளால் அலைக்கழிக்கப்பட்ட மக்களின் அவல நிலையைப் பார்த்து பெரிதும் கலக்கமுற்ற சிலர், வீழ்ந்து போன ரோமன் சபையை சீர்திருத்துவதற்குப் பதிலாக, அதற்கும் மேலான ஒரு நடவடிக்கைக்கான வேண்டுகோள் விடுத்தனர். புராட்டஸ்டண்ட், கத்தோலிக்கம் ஆகிய இரண்டையும் புறக்கணித்துவிட்டு, கிறிஸ்து ஏற்படுத்திய சபையை நோக்கித் திரும்பிச் செல்ல அவர்கள் விரும்பினர். எனவே, புதுப்பிக்கும் இயக்கம் (Restoration Movement) அமெரிக்காவில் ஆரம்பித்தது. ''வேதாகமம் பேசுவதைப் பேசுவோம்; அது பேசாதவற்றை நாமும் பேச மாட்டோம்'' என்பதே இந்த இயக்கத்தின் வேண்டுகோளாக இருந்தது. மத சம்பந்தமாக செய்யப்படும் காரியங்கள் யாவற்றுக்கும் ''கர்த்தர் இவ்வாறாகக் கூறினார்'' என்ற சுவிசேஷ அதிகாரத்தின் அவசியத்தை இந்த வேண்டுகோள் வலியுறுத்திற்று. எல்லா மனிதப் பெயர்கள், தத்துவங்கள், பாரம்பரியங்கள், பழக்கங்கள் அனைத்தையும் உதறிவிட்டு கிறிஸ்துவில் ஒரே சரீரமாக இணையவும், வேதாகமத்திற்குத் திரும்பிச் செல்லவிடுக்கும் ஒரு அழைப்பாகவும் அந்த அடிப்படை வேண்டுகோள் அமைந்தது

ஒன்றை நிச்சயப்படுத்திக் கொண்டனர். அதாவது 16ம் நூற்றாண்டின் சீர்திருத்த இயக்கத்தினர் செய்த அதே தவறை மீண்டும் செய்யக்கூடாது என்பதில், 'புதுப்பிக்கும் இயக்கத்தின் தலைவர்கள் உறுதியாக இருந்தனர். மீண்டும் ஒரு நாமகரண

சபையைத் தோற்றுவிக்க அவர்கள் வக்கலாத்து வாங்கவில்லை மாறாக, புதிய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்ட கிறிஸ்துவின் சபைக்குத் திரும்புவது பற்றிக்கூறினர். எனவேதான், கிறிஸ்துவின் சபை உறுப்பினர்கள் தங்களை ஒரு நாமகரண சபையின் அங்கம் எனக் கருதுவதில்லை. சுவிசேஷத்தில் கூறப்பட்ட சபையின் அங்கத்தினர்கள் என்று மட்டுமே நாங்கள் அழைக்கப்படுகிறோம்.

## கிறிஸ்து தனது சபையைக் கட்டினார்

தனது சொந்த சபையை இவ்வுலகில் ஸ்தாபிக்க கிறிஸ்து வந்தார். ''நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளுவதில்லை'' என மத்தேயு 16:18ம் வசனத்தில் இயேசு கூறினார். 'மனிதன் உண்டாக்கிய' மற்றுமோர் சபையை நிறுவி, மக்கள் பலரையும் அதில் உறுப்பினராக்கவோ, அல்லது ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட ஒரு மத அமைப்பிலிருந்து மக்களைப் பிரித்தெடுக்கவோ அவர் இவ்வுலகிற்கு வரவில்லை. தமது சுய ரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட சபைக்காக அவர் தனது உயிரைக் கொடுத்தார் (அப் 20:38). ''எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்'' என எபேசியர் 1;23ம் வசனத்தில் கிறிஸ்துவைப்பற்றி பவுல் கூறுகிறார். எனக்குத் தெரிந்தமட்டில், இந்த சபையை ஒரு நாமகரண சபையென எவரும் உரிமை கொண்டாடுவதாகத் தெரியவில்லை. என்றாலும் எல்லோரும் காணத்தக்கதாக, மனிதசட்டங்கள் யாவற்றுக்கும் விலக்காக, நாமகரணப் பெயர்களோ அல்லது அலுவலகமோ இன்றி இவ்வுலகில் இந்த சபை இயங்கி வந்துள்ளது மனித சரித்திரத்தில். கிறிஸ்து ஏற்படுத்திய இந்த சபைக்கு இணையாக எதுவும் வளர்ச்சி அடையவில்லை. அப்போஸ்தலர்களாலும், பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்ட மனிதர்களாலும் நற்செய்தி போதிக்கப்பட்ட போது ஆயிரக்கணக்கான மக்கள் அதற்குக் கீழ்ப்படிந்தனர். கர்த்தரால் அவர்கள் அனைவரும் தனது சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

## இறுதியாக......

எனவே கிறிஸ்துவின் சபையின் வேண்டுகோள் ஒரு குறிப்பிட்ட வேண்டுகோளாகும் இன்றைய மத உலகில் இது ஒரு ஒப்பற்ற வேண்டுகோள், கிறிஸ்து உயிர்த்த பின்னர் வந்த முதல்



(28-ம் பக்கம் பார்க்கவும்)

# சத்திய வழியிலே நடப்போம்!

''மனிதனுக்கு செம்மையாகத் தோன்றுகிற வழி உண்டு; அதின்முடிவோ மரண வழிகள்'' (நீதி. 14:12) என்ற காரணத்-தால், ''கர்த்தாவே, மனிதனுடைய வழி அவனாலே ஆகிறதல்ல வென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிற-தல்லவென்றும், அறிவேன்'' என எரேமியா தீர்க்கதரிசி கூறினார். (எரே. 10:23).

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறுகிறார்: ''சத்தி-யத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்'' (யோ. 8:32) நமது ஆத்துமாக்கள் சுத்தமாக இருக்கையில் நாம் ஆவிக்குரிய சுதந்திரத்தை அனுபவிக்கிறோம், ''சத்தியத்திற்குக் கீழ்ப்படிவதாலேயே'' நமது ஆத்துமாக்கள் சுத்தமாகின்றன. (1பேது. 1:22).

''.. உம்முடைய பிள்ளைகளில் சிலர் சத்தியத்திலே நடக்-கிறதை நான்கண்டு மிகவும் சந்தோஷப்பட்டேன்'' (2 யோ.4-என அப்போஸ்தலர் யோவான் எழுதினார், கர்த்தருடைய வசனத்திற்கு ஏற்ப நடப்பதே, சத்தியத்தில் நடப்பதாகும். தனது சீடர்-களுக்காக இயேசு தேவனிடத்தில் வேண்டும் போது, ''உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைபரிசுத்தமாக்கும்; உம்முடையவசனமே சத்தியம்'' (யோ. 17:17) எனக் கூறினார்.

சத்தியத்தில் நடக்க, "நாம் தரிசித்து நடவாமல், விசு-வாசித்து நடக்க வேண்டும்'' (2 கொரி: 5;6), ஏனெனில்'' விசு-வாசம் கேள்வியினாலே வரும்; கேள்வி தேவனுடைய வசனத்-தினாலே வரும்'' (ரோமர் 10:17)

பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்ட எபிரேய சங்கீதக்-காரன் எழுதுகிறார்:

உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது'' (சங். 119 : 105)

''உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்'' (சங் 119 : 130).

அப்போஸ்தலர் பவுல் சொல்லுகிறார்: ''வேத வாக்கியங்-களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவ-னுடைய மனிதன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்-துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப், படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. (2 தீமோ. 3:16, 17).

G. F. Raines

எஸ். எஸ். ராஜன்

# அந்த நாள் !

கடந்த காலத்திலே, முக்கியத்துவம் வாய்ந்த நாட்கள் பல வந்துள்ளன. சிருஷ்டிப்பின் ஆறு நாட்கள், ஜலப்பிரளயத்தின் நாட்கள், சீனாய் மலையிலே தேவனுடைய சட்டம் அளிக்கப்பட்ட நாள், கிறிஸ்து பிறந்த நாள், கிறிஸ்து உயிர்த்த நாள், கிறிஸ்து உயிர்த்தபின் வந்த முதல் பெந்தெகோஸ்தே நாள்-இவையாவும் முக்கியமான நாட்களே! என்ற போதிலும், இவை எல்லாவற்றையும் விட முக்கியத்துவம் வாய்ந்த நாள் இனி வரவிருக்கிறது. வேதாகமத்திலே '**அந்த நாள்**' என்று அது குறிக்கப்பட்டுள்ளது. வேதாகமத்திலிருந்து சில பகுதிகளை இங்கே காண்போம் :

''அந்நாளில் அநேகர் என்னை நோக்கி : கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளை துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள், அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்'' மத். 7:22,23,).

''அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்'' (மத். 24:36).

''....ஏனெனில் நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக் கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக் கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்'' (2 தீமோ. 1:12).

''அந்நாளிலே அவன் கர்த்தரிடத்தில் இரக்கத்தைக் கண்டடையும்படி, கர்த்தர் அவனுக்கு அனுக்கிரகம் செய்வாராக....'' (2 தீமோ. 1:18)

இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது; நீதியுள்ள நியாயாதிபதியான கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்'' (2 தீமோ. 4:8)

அந்த நாளிலே என்ன நடக்கும் என்பதை மத்தேயு 25ம் அதிகாரத்தில் இயேசு படம் பிடித்துக் காட்டுகிறார். அந்த நாளிலே ''மனித குமாரன் தமது மகிமை பொருந்தியவராக வருவார்''

(வ.31). யாரும் அறியாத ஏழையாக வெறுக்கப்பட்ட ஒதுக்கப் பட்ட, மனிதனாகவோ அவர் வரமாட்டார். மாறாக, ராஜாதி ராஜாவாக, தேவாதி தேவனாக அவர் வருவார். சகல மக்களும் அவருக்கு முன்பாக சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம் மறிஆடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறது போல அவர்களை அவர் பிரிப்பார் வ (32). தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து, ''வாருங்கள் என் பிதாவினால் ஆசிர்வதிக்கப் பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பன்னப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்'' என்பார் (வ 34) ஆனால், அவருடைய இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்தோ சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்' என்பார் (வ 41). இறுதியாக, ''அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்'' (வ 46).

தேவனுடைய சரியான நியாயத் தீர்ப்பிலிருந்து ஒருவரும் அந்த நாளிலே தப்ப முடியாது. ''மரித்தோராகிய சிறியோரையும், பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவ புஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்கு தக்கதாக நியாயத் தீர்ப்படைந்தார்கள்'' என்பதாக அப்போஸ்தலர் யோவான் தான் கண்ட காட்சியை விவரிக்கிறார்) வெளி 20:12),

இவ்வுலகில் வாழ்ந்த சகல மக்களும் அந்நாளில் அங்கு இருப்பர். பணக்காரனும் ஏழையும், அரசனும் ஆண்டியும், வாலிபனும் வயோதிகரும், நீதிபதியும் குற்றவாளியும், பரிசுத்தவானும் பாவியும், இப்படியாக எல்லா மக்களும் அந்நாளில் அங்கு இருப்பர். ஆம், நீங்களும் நானும் கூட அங்கு இருப்போம். தேவனுடைய சரியான நீதிக்கு எவருமே தப்ப முடியாது.

நமது கடந்தகால கிரியைகள் யாவும் நினைவூட்டப்பட்டு, அவை யாவற்றுக்கும் கணக்குத் தரவேண்டிய நாளாக அந்தநாள் அமையும்.

நாம் பேசும் வீணான வார்த்தைகள் யாவற்றுக்கும் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் (மத். 12:36,37)

நமது துர்சிந்தனைகள் யாவற்றுக்கும் கணக்கு கொடுக்க வேண்டும். தேவனுக்குக் கீழ்ப்படியாமல் நடந்ததற்குப் பதில் சொல்லவேண்டும். எபிரேய நிருபத்தின் எழுத்தாளன் ஒரு கேள்வியை எழுப்புகிறார். "....இவ்வளவு பெரிதான இரட்-சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வோம்?" தப்பிக்க வழி கிடையாது என்பதே இதற்குத் திட்டவட்டமான பதிலாகும். கர்த்தருக்குக் கீழ்படிவதில் நாம் அசட்டையாக இருக்கக்கூடாது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றி, 2 தெசலோனிக்கேயர் 1ம் அதிகாரத்தில், வசனம் 7ல் இருந்து அப்போஸ்தலனாகிய பவுல் கூறும்போது "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்" என்றார்.

ஆம், நண்பரே, அந்த நாளிலே நாம் தேவனை தரிசிப்-போம். நீங்கள் அதற்குத் தயாராக இருக்கிறீர்களா?

Roy Beaslay

(24-ம் பக்கத் தொடர்ச்சி)

பெந்தெகோஸ்தே நாளிலே ஜெருசலேம் நகரில் நிறுவப்பட்ட சபைக்கு முற்றிலுமாகத் திரும்பிச் செல்ல விடுக்கும் வேண்டுகோள் இது (அப்.2). புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களைப் போலவே ஆராதிக்கவும், அதை சபையில் அங்கம் வகிக்கவும், அதே பெயரைக் கொண்டதாகவும், அதே சட்ட திட்டங்களை (புதிய ஏற்பாடு) கடை பிடிப்பவர்களாகவும் இருப்பவர்கள் புதிய ஏற்பாட்டு கிறிஸ்-தவர்களாகத் தானே இருக்கமுடியும்? நீங்கள் அங்கம் வகிக்கும் சபையைப்பற்றி இவ்வாறாகக் கூற முடியுமா?

Jim Laws

எஸ். எஸ். ராஜன்

YOUR ATTENTION PLEASE !

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9:00 to 9: 5 P. M.
Fridays - 7:45 to 8:00 P. M.

**HINDI** Satya Susasamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi-110049
Thursdays-9:00 to 9-15 P. M.
Fridays- 9:00 to 9:15 P. M.
Tuesdays-9 00 to 9:5 P. M.
Sundays- 12 45 to 1:00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2:15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2: 5 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bankalore 560004.
Sundays 1- :45 to 2:00 P.M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are avilable in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

## வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள்

நமது பத்திரிக்கையைப் பாராட்டி பல வாசகர்களிடமிருந்து தொடர்ந்து கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இப்பணியைச் சிறப்பாகச் செய்ய தேவனின் வல்லமையான கரங்கள் உதவி செய்வதற்காக நன்றி கூறுகிறோம்.

இப்பணியை இன்னும் சிறப்பாகச் செய்ய, வெளிவரும் கட்டுரைகள் மொழியாக்கம் இவைகளைப் பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வரவேற்கிறேன்.

நன்றி - ஆசிரியர்

**Published by Church of Christ Kangayam and Printed at Jeevasakthi Press, Erode.**

**Editor. E.Z.S. Rajanayagam**

PRINTED MATTER BOOK-POST

TO

If undelivered please return to:

The Editor

**THIRUMARAI AASAAN**

Post Box No. 27 KANGAYAM-638 701